வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05

22.07.2024 திங்கட்கிழமை

இதழ் : 204

பக்கங்கள் : 12




# தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மீளுருவாக்க ஒத்துழையுங்கள்

## தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு சிறீதரன் அழைப்பு



கொழும்பு, ஜூலை 22

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள உருவாக்கவும் - மீளுருவாக்கப்படும் கூட்டமைப்பு தேர்தலுக்கானது என்பதை கடந்து தேசத்துக்கானதாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு தமிழ்த் தேசிய தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.**

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவரின் உரையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

ஈழத்தமிழினத்தின் இறையாண்மைக்கு நீதி வேண்டி நாங்கள் மேற்கொள்ளும் அறவழி 11

# ஜனாதிபதி தேர்தலில் எங்களின் வாக்கை தமிழ் பொது வேட்பாளருக்கு அளிப்போம்



## மக்களை கோருகிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஜூலை22

"நாங்கள் யாவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் வாக்குகளை அளிப்போம்" - என்று அழைப்பு விடுத்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவரின் 11

# செப். 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல்?

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறலாம். எனினும், இந்த வாரம் உறுதியான தகவல்கள் வெளியாகும் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஓகஸ்ட் நடுப்பகுதியில் ஏற்கப்படும். ஒக்ரோபர் 5 முதல் 12ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் 11

# அரச ஊழியர்களுக்கு ரூ. 5,000 ஊதிய உயர்வு?

கொழும்பு, ஜூலை 22

அனைத்து அரச ஊழியர்களின் சம்பளத்தையும் 5 ஆயிரம் ரூபாயால் அதிகரிப்பது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி பணிமனை வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. 11

# சொத்து அறிக்கை வழங்காத எம். பிக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 22

சொத்துப் பொறுப்பு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசாரணைக் குழு எச்சரிக்கை கடிதம் அனுப்பியுள்ளது.

30 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை தமது சொத்து பொறுப்பு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. சொத்துகள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 67 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

# 129 பில்லியன் ரூபாய் கடனை 6 மாதத்தில் செலுத்தினோம்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூலை 22

நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் திறைசேரி உண்டியல்கள், பிணைமுறிகள் ஊடாக பெற்றுக் கொண்ட கடன் பெறுமதியை காட்டிலும் 129 பில்லியன் ரூபாய் கடன் மீள்செலுத்தப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 2024ஆம் ஆண்டு முதல் ஆறு மாத 11

# தமிழ் தேசிய பேரவை புரிந்துணர்வு இன்று!

யாழ்ப்பாணம், ஜூலை 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நோக்கில் தமிழ்த் தேசிய பேரவையின் புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய கொள்கை சார்ந்து இயங்கும் - ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் ஆகிய ஐந்து கட்சிகளும் க. வி. 11

சாவகச்சேரி மருத்துவமனை விவகாரம்:

# 15 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூலை 22

சாவகச்சேரி மருத்துவமனையில் காணப்படும் குறைபாடுகளுக்கு தீர்வு காணும் நோக்கில் மாதாந்தம் ஒரு கலந்துரையாடலை நிர்வாகத்துடன் மேற்கொள்வதற்காக 15 பேர் கொண்ட அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பிரச்னைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சமூக மட்ட அமைப்பினர் சாவகச்சேரி ஆதார 11

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் குறித்து அறிக்கை

## பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை பெறுவதற்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடு விரைவில் ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கவுள்ளது. இதன்போது, வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய முறைமை தொடர்பில் தீர்மானிக்கவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த நிலையிலேயே, நாட்டில் ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ்மா 11

# தேர்தலில் தனியாக களமிறங்க வியூகம்!

## மொட்டு கட்சி வகுக்கிறது

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள் தீர்க்கப்படாத நிலையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளர் ஒருவரை களமிறக்கப் பேச்சுகள் நடக்கின்றன.

கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ , தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் தம்மிக பெரேரா ஆகியோர் முன்னெடுத்த பேச்சில் கட்சி சார்பில் தனித்து வேட்பாளரை நிறுத்துவதற்கான சாத்தியம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது. 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நேற்றுக் காலையில் ஆலயத்துக்கு சென்று வழிபட்டுவிட்டு வெளியே வந்தபோது, இருவர் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் சொன்னார், "அது என்ன இவரும் தன்னை தோழர் என்று சொல்லியிருக்கிறார்?".

நான் திரும்பி அவர்களைப் பார்த்தேன், அவர்கள் எதிரே இருக்கின்ற சுவரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை பார்த்தார்கள். யாழ்ப்பாண நகரத்தில் மாத்திரமல்ல, வடக்கு மாகாணம் முழுவதும் அந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமாரவின் படத்துடன், "தோழர் அநுர" என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் அவை. அதில் அநுரவைவிட தோழர் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பெரிதாக போடப்பட்டிருந்தது. அதனைத்தான் அந்த இருவரும் பார்த்து தங்களுக்குள் சத்தமாக கதைத்துக் கொண்டிருந்தனர்.

வடக்கை பொறுத்தவரை குறிப்பாக யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை "தோழர்" என்பது ஒருவரைக் குறிக்கும் சொல். அதற்கு வேறுயாரும் உரிமைகொண்டாட முடியாத அளவுக்கு நம்மவர்கள் மனதில் அது பதிந்துவிட்டது என்பது அவர்களின் சம்பாசனையில் தெரிந்தது. நான் உற்றுப் பார்த்தேன். அதில் "எங்கள் தோழர்" என்றுதான் எழுதப்பட்டிருந்தது. அதாவது ஜே. வி. பியினருக்கு அவர் தோழர். "உங்கள் தோழர்" அதாவது, மக்களின் தோழர் அல்ல.

நான் தொடர்ந்து நடந்தபோது, மற்றவர் சொன்னார், "அது என்ன தோழரின் நோட்டீஸுக்கு பக்கத்தில சைக்கிள்காரரும் ஒட்டியிருக்கினம்?" என்று.

எனக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. தேசிய மக்கள் சக்தியினர் ஒட்டிய தோழர் அநுரவின் பட சுவரொட்டிகளுக்கு அருகில், அவர்களே வேறு சுவரொட்டிகளையும் அருகருகே ஒட்டியிருக்கின்றனர்.

அதில் "தேசமே அஞ்சாதே" என்று இரண்டு வரிகள் மாத்திரமே எழுதப்பட்டுள்ளன.

அதனைத்தான் மற்றவர் சைக்கிள் காரர்களின் சுவரொட்டி என்கிறார். அவர்கள்தானே இரண்டு தேசம் ஒரு நாடு என்கிறார்கள். தேசம் குறித்து பயப்படாதீர்கள் என்றால் அது தமிழர் தேசம் பற்றித்தானே யாழ்ப்பாணத்தில் பேசப்படும்? அதாவது தமிழர் தேசம் பற்றிப் பயப்பட வேண்டாம் என்கிறார்கள் என்பது மற்றவரின் கருத்து.

காலையிலேயே சிரிப்பதற்கு ஒரு சம்பாசனை கிடைத்த திருப்தியில் நான் அவ்விடத்திலிருந்து நகர்ந்தேன்.

சரி, இனி இன்று சொல்ல வந்த விடயத்துக்கு வருவோம்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் கடந்த ஒரு வருடமாகவே பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தலுக்கான அணி திரட்டல்கள், ஆட்பிடித்தல்கள் என்பவற்றில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி மாத்திரமே தாம் எவருடனும் கூட்டுச்சேரப் போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டு, நமது சீமான் பாணியில் தமது தேர்தல் பிரசாரத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தானே என்று சஜித் பிரேமதாஸ அறிவித்துவிட்டு கடந்த ஒரு வருடமாக பிரசாரத்தை நடத்திக் கொண்டிருந்தாலும் அவரின் ஐக்கிய மக்கள் கூட்டணி இன்று வரை இறுதி செய்யப்படவில்லை. முக்கியமாக அவரோடு இன்றும் இருக்கின்ற எனக் கூறிக்கொள்கின்ற சிறுபான்மை கட்சிகள்கூட ஜனாதிபதித் தேர்தலில் தாம் யாரை ஆதரிக்கப் போகின்றோம் என்பதை உறுதியாகத் தெரிவிக்கவில்லை. டலஸ் அணி, சுதந்திரக் கட்சியின் தயாசிறி அணி என்று ஒவ்வொரு உதிரிக் கட்சிகளுடனும் தனி நபர்களுடனும் இப்போதும் பேசிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

அதேபோல ரணில் தரப்பும் யாரோடு எப்படி கூட்டணி என்பதை உறுதியாக இன்னமும் சொல்ல முடியாத நிலையில்தான் இருக்கின்றது. இந்த மாத இறுதியில் அநேகமாக ரணில் தரப்பு மாத்திரமல்ல, சஜித் தரப்பும் தமது கூட்டணியை உறுதி செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றன.

இந்த விடயங்களை எழுதுகின்ற போதுதான், நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அடுத்த கட்ட நகர்வை மற்றுமொரு வேட்பாளரும் இன்று எட்டவிருக்கின்ற செய்தியை இங்கே பகிர்ந்து கொள்ளாமல் இருக்கமுடியவில்லை.

இதுகாலம் வரை, சிவில் சமூகத்தினர் மாத்திரமே பேசிக்கொண்டிருந்த தமிழ் பொதுவேட்பாளர் விவகாரத்தை இன்று முதல் ஏழு அரசியல் கட்சிகள் இணைந்து வழிநடத்தவிருக்கின்றன.

சிவில் சமூகங்கள், சில தனிநபர்கள், பொது அமைப்புகள் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபையும் ஏழு தமிழ் தேசியக் கட்சிகளும் இன்று காலை செல்வா கலையரங்கில் கூடி "தமிழ் தேசிப் பேரவை" என்ற பெயரில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவிருக்கின்றனர்.

இன்று இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் வேட்பாளரை தெரிவுசெய்வதற்காக ஒரு குழுவும், தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்காக இன்னுமொரு குழுவும் அமைக்கப்படவிருக்கின்றன. இவை அமைக்கப்பட்டதும் அவர்கள் விரைவாகவே கூடி ஒரு பொதுவேட்பாளரை இனங்கண்டு களத்தில் இறங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். இதுவரை இந்த வியடத்தில் தமிழ் மக்கள் பொதுச்சபையுடன் சேர்ந்து பயணிக்க ஏழு தமிழ் தேசியக் கட்சிகள் முன்வந்திருந்தாலும் இதுதொடர்பாக தமிழ் அரசு கட்சி இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்றாலும் அந்தக் கட்சியிலும் பெரும்பாலானவர்கள் இதற்கு ஆதரவு நிலையிலேயே இருப்பதால் அவர்களும் இந்த முயற்சியின் பின்னால் அணிதிரள்வார்கள் என்றே நம்பப்படுகின்றது.

- ஊர்க்குருவி

## யாழ்ப்பாணத்தில் வர்த்தகக் கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 22

தொழில் துறைகளை மேம்படுத்தும் நோக்கில் "யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024" எனும் வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சி முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் 23 முதல் 25ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை முற்றிலும் இலவசமாக பார்வையிடமுடியும். முதல் நாள் நிகழ்வில் யாழ். இந்திய துணைவேந்தர், வடக்கு மாகாண ஆளுநர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்கள். இரண்டாம் நாள் கடற்தொழில் அமைச்சர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

கண்காட்சி தொடர்பில் யாழ்ப்பா ணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே ஏற்பாட்டாளர்கள் அதனை அறிவித்துள்ளனர்.

கண்காட்சி தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுமானம், பிற தொழில் துறைகளில் பங்காளர்களுக்கு தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த ஒரு தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 200இற்கும் மேற்பட்ட காட்சி கூடங்களுடன் பல்வேறு நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள், கட்டுமானம் மற்றும் பிற தொழில்களை இணைந்து மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கப்படுகின்றனர்

இதேசமயம், சிறு தொழில் முயற்சியாளர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பிரபலப்படுத்தவும் உதவும்.

வடக்கு, தெற்கு வர்த்தக இணைப்புகளை வலுப்படுத்தும் இந்த கண்காட்சியில் கட்டுமானம் சார் இயந்திரங்கள், உபகரணங்கள், விவசாயம் சார் உபகரணங்கள், மின் உபகரணங்கள், கைவினை பொருட்கள், செரமிக் மற்றும் கண்ணாடிப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், சுகாதாரம், உணவு மற்றும் உடைகள் போன்ற பல துறைகளில் உள்ள தயாரிப்புகள் மற்றும் சேவைகளை காட்சிப் படுத்தவுள்ளன.

இந்தக் கண்காட்சியில், பொருட்கள் சேவைகளை 40 வீதம் வரையில் விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ள முடியும். வடக்கைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர் களுக்கு முன்னுரிமை அடிப்படையில் காட்சிக்கூடங்களை வழங்கவுள்ளோம்.

(ஐ)

## தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாடு நடைபெற்றது

யாழ்ப்பாணம்,ஜூலை 22

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நேற்று தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

மங்கள வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மாலைகள் அணிவிக்கப்பட்டு, கட்சிக் கொடி ஏற்றப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் மாநாடு ஆரம்பமானது.

மங்கள விளக்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், க. வி. விக்னேஸ்வரன், தமிழ் அரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, யாழ். பல்கலைக்கழக அரசியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மயூரன், பேராசிரியர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள் ஏற்றி வைத்தனர்.








போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான பொது நினைவுச்சுடரை விக்னேஸ்வரன் எம்.பி. ஏற்றிவைத்தார். அத்துடன், அண்மையில் மறைந்த தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

(ஐ)

## ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 22

ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார் என்று மகியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவர் கொழும்பு - தெஹிவளை பகுதியிலிருந்து மகியங்கனை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு ஐஸ் போதைப்பொருளை கொண்டு சென்று விற்று வந்துள்ளார்.

அவரைக் கைது செய்தபோது, அவரிடமிருந்து 15 கிராம் 800 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் 10 ஆயிரம் ரூபாய் பணம், கைபேசி என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.07.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆடி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தீவின் அரசியல் எதிர்காலம்?

யார் அடுத்த ஜனாதிபதி? இந்தக் கேள்வியில்தான் இலங்கையின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தொடர்ந்தும் மூன்றாவது நிலையில் இருக்கிறாரெனக் கணிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும் அவரோ, தடுமாற்றமின்றி அவருக்கே உரித்தான தந்திரங்களில் ஈடுபட்டு வருகின்றார். மாக்கிய வல்லியின் ஒரு கூற்றுண்டு. அதாவது, "சூழ்ச்சியால் அடையக்கூடிய ஒன்றை யுத்தங்களின் மூலம் அடைய முயற்சிக்கக்கூடாது", இதனை எவரையும் விடவும் ரணில் அறிவார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சாணக்கிய பாசறையில் படித்து வெளியேறிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாக்கியவல்லியின் தந்திரக் கணக்கு நன்றாகவே புரியும். ஆனாலும், ஒரு தேர்தல் வெற்றியை வெறுமனே தந்திரக் கணக்குகளால் அளவிட்டு விடமுடியாது. என்னதான் தந்திரங்கள் புரிந்தாலும்கூட சாதாரண மக்கள் வாக்களிக்காது விட்டால் ஒருவரின் தந்திரங்களுக்கு பயனில்லாமல் போய்விடும். ரணில் விக்கிரம சிங்க ஒரு புத்திஜீவித்துவ அரசியல்வாதி. ஆனாலும், அவரின் புத்திஜீவித்துவம் இதுவரையில் அவரை சாதாரண சிங்கள மக்களின் மனதில் நிறுத்தவில்லை. இந்த விடயத்தில் அவர் புரிந்துகொள்ள வேண்டிய இடம் ஒன்று உண்டு. இம்முறை அந்த விடயத்தை அவர் எவ்வாறு புரிந்து கொள்ளப் போகின்றார்? அவரால் முடியுமா?

பொதுவாக இலங்கைத்தீவின் அரசியலில் வெளியாரின் தலையீடுகள் நிச்சயம் இடம்பெறும். அது எவ்வாறு இடம்பெறும்? - எப்போது இடம் பெறும் - என்பது பற்றிய ஊகங்களை ஒருவர் வெளியிடலாமேயன்றி முடிந்தமுடிவாக எதனையும் கூற முடியாது. ஏனெனில், அது ஊகங்களுக்கு அப்பால்பட்டது. என்னதான் வெளித்தரப்புகள் தலையீடு செய்தாலும் மக்கள் மத்தியில் கணிசமான செல்வாக்கு உள்ள ஒருவரைப் பற்றிதான் அவர்கள் சிந்திக்க முடியும். ஒருவேளை அவர்களின் நலன்களுக்கு தேவையான ஒருவர் வெற்றிபெற வேண்டுமென்று அவர்கள் விரும்பினாலும்கூட மக்கள் செல்வாக்கை திரட்டிக்கொள்ள முடியாத ஒருவரை - அவர்களால் ஆதரிக்க முடியாது. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்குத் தேவையான ஒருவர்தான் - சர்வதேசத்தை அறிந்தவர்தான் - என்பதெல்லாம் இரண்டாவது விடயமாகிவிடும். முதல் விடயம் எத்தனை வீதமான வாக்குகளை ரணிலால் பெற முடியும்?

ஆனால், ஒரு விடயம் மட்டும் உண்மை - அதாவது, இலங்கைத் தீவின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கவுள்ள ஒரு தேர்தல் நடைபெறவுள்ளது. அது நிச்சயமானது. தேர்தலில் எவர் வெற்றிபெற்றாலும் தீவின் அரசியல் ஏதோவொரு வகையில் வெளியாரின் நிகழ்ச்சிநிரலுக்குள்தான் இருக்கும். இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து அண்மைக்காலத்தில் மீண்டுவிட முடியாது. இலங்கைத் தீவை மீட்கும் சாகசங்களை எவராலும் புரிய முடியாது.

இந்த இடத்தில் எழும் கேள்வி - தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? இதுவரையில் இதற்கான பதில் குறித்து எவரிடமும் சரியான புரிதலில் இல்லை. இந்தப் பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு மேலெழுந்தது. இன்றைய நிலையில் தமிழ் மக்கள் எவ்வாறு தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்னும் கேள்விக்கான ஒரேயொரு பதில் - தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது மட்டும்தான். அந்தப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் வாக்குளை திருப்புவதன் ஊடாக - தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னை ஓங்கியொலிப்பதும் - அதனை தீர்க்காமல் தமிழ் மக்களின் வாக்குகளை கோரும் தகுதிநிலை தென்னிலங்கையின் வேட்பாளர் எவருக்கும் இல்லையென்பதை தமிழ் மக்கள் உறுதியாகக் கூற வேண்டிய காலம் இது. அவ்வாறு கூறவேண்டுமாயின் அதற்கான வழி என்ன?

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் தென்னிலங்கை அவர்களுக்கான தேவையில் ஒன்றித்து விடுவர். தமிழ் மக்கள் வழமைபோல் சாதாரணமாக மறக்கப்பட்டு விடுவர். தமிழ் மக்கள் மறக்கப்பட்டு விடாமல் இருக்க வேண்டுமாயின், தமிழ் பொது வேடபாளர் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதில் வெற்றி பெறவேண்டும்.

## ஆசிரியர் தாக்கினாராம் மாணவன் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஒப்படை சமர்ப்பிக்கத் தவறியதால் தன்னை ஆசிரியர் மூர்க்கத்தனமாகத் தாக்கினார் என்று பாடசாலை மாணவன் ஒருவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோப்பாய் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். குறித்த ஆசிரியரின் ஒப்படையை சமர்ப்பிக்க தவறியதாலேயே ஆசிரியர் தன்னை தாக்கினார் என்று முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளில் கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## ஆற்றில் நீராடிய மாணவன் பலி!

கொழும்பு, ஜூலை 22

ஆற்றில் நீராடச் சென்ற நிலையில் நீரில் மூழ்கி மாணவன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலி - கரந்தெனிய பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி பயிலும் எல்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 16 வயது மணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவன் நண்பர்களுடன் சேர்ந்து ஹிக்கடுவை ஆற்றில் நீராட சென்றுள்ளார். 9 பேர் சென்ற நிலையில் நால்வர் நீரில் மூழ்கினர். இதில், நால்வர் காப்பற்றப்பட்டனர்.

ஹிக்கடுவை புகையிரத பாலம் அருகே நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## தமிழ் பொது வேட்பாளர்; தெளிவூட்டல் கருத்தரங்கு



வவுனியா, ஜூலை 22

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பொது மக்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்கு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா வாடி வீட்டில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வட மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் தமிழ் மக்கள் பொது வேட்பாளரின் அவசியம் குறித்து உரையாற்றினர்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் துளசியின் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## சஜித் தலைமையிலான கூட்டணி ஓகஸ்ட் மாதம் அறிவிக்கப்படும்!

கொழும்பு, ஜூலை 22

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய கூட்டணி அடுத்த மாதம் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படும். ஏற்கனவே கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் - பாராளுமன்ற உறுப்பினர்களும் புதிதாக சில கட்சிகள் உள்வாங்கப் படவுள்ளனர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தலின்போதும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் - என்றும் கூறினார். (ஐ)

## கிளப் வசந்த கொலை; இளம் பெண் கைது!

கொழும்பு, ஜூலை 22

அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டில் "கிளப் வசந்த" என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

21 வயதான இளம்பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துருகிரியவில் பச்சை குத்தும் நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில் நடந்த இந்த கொலை சம்பவத்தில் நிலைய உரிமையாளர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே இந்த யுவதி நேற்றுமுன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பிரபலங்கள் உதவுவார்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். மதிப்பு கூடும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். வியாபாரத்தில் உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கடகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாயார் ஆதரவாக பேசுவார். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமுக அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வாகன வசதிப் பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆறுதல் கிடைக்கும். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். வேற்று மதத்தவர் அறிமுகமாவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வெற்றி பெறும் நாள்.

**தனுசு**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். மற்றவர்களுக்காக பரிந்து பேசி சிக்கிக்கொள்ளாதீர்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்கு உள்ளாவீர்கள். பிள்ளைகளிடம் எதிர்மறையாக பேசாதீர்கள். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். சாதிக்கும் நாள்.

# 2026 சட்டப்பேரவை தேர்தலுக்கு இப்போதே தயாராகும் தி. மு. க.

## 5 பேர் கொண்ட ஒருங்கிணைப்பு குழு அறிவிப்பு

சென்னை, ஜூலை 22

தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தயாராகும் வகையில், அமைச்சர்கள் கே. என். நேரு, உதயநிதி உள்ளிட்ட 5 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து கட்சியின் தலைவரும், முதல்வருமான மு. க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.



தேர்தல்களில் தி. மு. க. கூட்டணிக்கு தொடர் வெற்றி கிடைத்து வரும் நிலையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் எளிதாக வெல்லலாம் என்ற அலட்சியம் கூடாது, எதிர்க்கட்சிகளைப் பலவீனமாகக் கருதக் கூடாது, இலக்கு நோக்கி, திட்டமிட்டுப் பயணிக்க வேண்டும்" என்று கட்சி நிர்வாகிகளிடம் முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், சட்டப் பேரவைத் தேர்தல் பணிகளை தி. மு. க. தற்போதே தொடங்கி விட்டது. இதற்காக ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து, கட்சித் தலைவர் மு. க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

மக்களவைத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு, தனது பணிகளை மிகச் சிறப்பாகச் செய்தது. அந்த வகையில், வரும் 2026 சட்டப் பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கட்சியில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள், அமைப்பு ரீதியான சீரமைப்புகளை கட்சித் தலைவருக்கும், தலைமைக்கும் பரிந்துரைக்கவும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் அமைச்சர்கள் கே. என். நேரு, எ. வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# "கொலைக்களமாகும் தமிழகம் 200 நாட்களில் 595 கொலைகள்"

சென்னை, ஜூலை 22

தி. மு. க. ஆட்சியில் தமிழகம் முழுவதும் இந்த ஆண்டு சுமார் 200 நாட்களில் 595 கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றன என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தி. மு. க. ஆட்சியில் கொலைகள் செய்வதையே தொழிலாகக் கொண்டு பலர் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து வெறியாட்டம் ஆடுவதும், பல கொலைகளில் ஈடுபட்ட கொலையாளிகளை கண்டுபிடிக்க முடியாமல் பொலிஸார் திணறுவதும் கண் கூடாகும் என்றும் பழனிச்சாமி குறிப்பிட்டுள்ளார். (எ)



# "உதயநிதி துணை முதல்வர்?"

திருப்பூர், ஜூலை 22

"உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராவதை வழிமொழிகிறேன்" என்று திருப்பூரில் தமிழ் வளர்ச்சி அமைச்சர் மு. பெ. சாமிநாதன் கூறியுள்ளார்.



திருப்பூரில் பொதுமக்களின் வசதிக்காக திருப்பூர் புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு திருப்பூர் மண்டலம் சார்பில் 19 புதிய பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அமைச்சர் சாமிநாதன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். பின்னர், அமைச்சர் சாமிநாதன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு, "தி. மு. க. இளைஞரணி 45 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த நிலையில், இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக வேண்டும் என பலரும் வலியுறுத்தி வருகிறார்கள். இதனை வழிமொழிகிறேன். உதயநிதி ஸ்டாலினிடம் துணை முதல்வராக திறம்பட செயலாற்றக்கூடிய திறமை உள்ளது. அவர் துணை முதல்வராகும் பட்சத்தில் தமிழகத்தில் இன்னும் சிறப்பான ஆட்சியை கொண்டுவர முடியும். இதனால் அவர் துணை முதல்வராவதை வழிமொழிகிறோம்"- என்றார். (எ)

# "2026இல் தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெற வேண்டும்"

சிவகங்கை, ஜூலை 22

"2026ஆம் ஆண்டு அமையும் தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெற வேண்டும்" என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.



சிவகங்கையில் நடைபெற்ற காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்களவைத் தேர்தலில் கூட்டணியால் வெற்றி பெற்றோம் என்பதற்காக நமக்கு பலம் இல்லை என்று நினைக்க வேண்டாம். காங்கிரஸ் சேரும் கூட்டணிக்குத் தான் சிறுபான்மையினர், ஆதிதிராவிடர்கள் வாக்கு அளிக்கின்றனர். 40 தொகுதிகளிலும் வெல்வதற்கு நாமும் உறுதுணையாக இருந்துள்ளோம்.

கூட்டணி தர்மம் என்று கூறி கூனி, குறுகி இருக்கக் கூடாது. தேர்தல் இல்லாத நேரத்திலும் நாம் ஆக்கபூர்வமான அரசியல் கட்சியாக செயல்பட வேண்டும். வருகிற 2029இல் இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும். ஆனால், அதற்கு முன் 2026ஆம் ஆண்டு தமிழகத்தில் காங்கிரஸுக்கு முக்கியமான தேர்தல். அப்போது அமையும் தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெற வேண்டும்" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு போகவிடாது அமைச்சரை அதிகாரிகள் தடுத்தார்கள்

## வெளிப்படுத்தினார் மனோ எம். பி.

கொழும்பு, ஜூலை 22

**சாவகச்சேரி மருத்துவமனைக்கு தான் செல்லவிருந்த போதும், அங்கு செல்லவேண்டாம் என்று கூறி மருத்துவத் துறையினர் தடுத்துவிட்டனர் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தமக்கு தெரிவித்தார் என்று மனோ கணேசன் எம். பி. தெரிவித்துள்ளார்.**



இந்த விடயம் தொடர்பில் மனோ கணேசன் எம். பி. தனது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் பதிவில், "சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, யாழ்ப்பாணத்துக்கு செல்கிறார் என அறிந்ததும் பாராளுமன்றில் வைத்து அவரிடம் "சாவகச்சேரி மருத்துவமனையில் ஏதோ பிரச்னை இருப்பதாக பேசப்படுகிறது. அங்கே சென்று பாருங்கள்", என்று கூறினேன்.

அவர் அங்கு போகவில்லை என்று அறிந்ததும் அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்.

"ரமேஷ், யாழில் ஏன் சாவகச்சேரி மருத்துவமனைக்கு செல்லவில்லை? உங்கள் பயண திட்டத்தில் அது அமையப் பெறவில்லையா? அங்கே சென்று பாருங்கள், என்று கூறி இருந்தேனே?" என்று கேட்டேன்.

இதற்கு பதிலளித்த ரமேஷ் பத்திரண , "சாவகச்சேரி மருத்துவமனைக்கு செல்ல இருந்தேன். சிலர் வேண்டாம் என்றார்கள். மருத்துவ துறையை சார்ந்த சிலரே இதனை கூறியிருந்தனர். ஆனால் அந்த மருத்துவமனைக்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து விட்டு வந்தேன்", என்று கூறினார் - என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# கரபந்தாட்ட மாகாண சம்பியன் ஆவரங்கால் மகாஜன வசமானது!

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கு மாகாண ஆண்களுக்கான 16 வயது பிரிவினருக்கான கரப்பந்தாட்ட போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் சம்பியனானது

வடக்கு மாகாண விளையாட்டு நிகழ்வில் கரப்பந்தாட்ட போட்டியில் இறுதிப் போட்டிகள் யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில், 16 வயது பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அணிகள் மோதின.

முதல் சுற்றில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 25 புள்ளிகளையும் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி 23 புள்ளிகளையும் பெற்றன. இரண்டாவது சுற்றில் ஆவரங்கால் மகாஜன 25 புள்ளிகளையும் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி 18 புள்ளிகளையும் பெற்றன. இந்த வெற்றிகளின் மூலம் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

தம்மை நெறிப்படுத்திய பாடசாலையின் அதிபர் ப. கமலதாசன், உடற்கல்வி ஆசிரியர் ஐங்கரன், பயிற்றுவிப்பாளர் டினூஜன் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையே வெற்றிக்குக் காரணம் என்று அணியின் தலைவர் தெரிவித்தார். (ஐ)



# தேர்தல் வாக்குறுதிகள் தொடர்பில் புதிய சட்டம் இயற்றப்படவேண்டும்!

## மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்

கொழும்பு, ஜூலை 22

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும் எனக் கோரும் கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக மக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் இயற்றப்படவேண்டும். இவ்வாறு பொய் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றமையால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என தெரிவித்துள்ள மீனவர் அமைப்பு அனைத்து மாவட்டங்களிலும் கையெழுத்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்தது. இந்நிலையில், முன்னெடுக்கப்படும் இந்தக் கையெழுத்துப் போராட்டம் நேற்று மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழ் பண்பாட்டு உடைகளுடன் வந்து கௌரவத்தை ஏற்ற ஜேர்மன் ஆய்வாளர்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட ஜேர்மனிய நாட்டு பெண் ஆய்வாளர் மதிப்பளிக்கப்பட்டார். இந்த மதிப்பளிப்பு நிகழ்வில் அவரும் அவரின் பிள்ளைகளும் தமிழ் பண்பாட்டு ஆடைகளுடன் வருகை தந்தமை பலரின் கவனத்தையும் ஈர்த்தது.



யாழ்ப்பாணத்தில் அகழ்வாய்வு பணிகளில் ஜேர்மன் நாட்டை சேர்ந்த கலாநிதி அரியானா ஈடுபட்டு வருகின்றார். கந்தரோடையில் 2023 ஆம் ஆண்டு அகழ்வாய்வுகளை மேற்கொண்டு அவற்றின் ஆய்வுகளை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

தற்போதும் கந்தரோடை அகழ்வாய்வு பணிகளுக்காக ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்துள்ளார். இந்நிலையில் கடந்த ஒரு மாத காலமாக ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற தொல்லியல் அகழ்வாய்வு பணிகளிலும் அவர் பங்கேற்றிருந்தார்.

ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட ஆறு மண் படை மாதிரிகளை பரிசோதனை செய்வதற்கான முழு ஏற்பாட்டையும் அவரே செய்து வருகின்றார். மண் படைகளை பரிசோதனைக்கு உட்படுத்தி அவற்றின் காலத்தை காணிப்பு செய்வதற்காக அதனை அவர் ஜேர்மன் நாட்டுக்கு எடுத்து செல்லவுள்ளார்.

ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றிருந்தது.

இதன்போது, தனது பிள்ளைகளுடன் தமிழர் கலாசார உடைகளுடன் பங்கேற்ற அவருக்கு அவரின் பிள்ளைகளால் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

# சுகாதார துறை அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் குழு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 22

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை தொடர்பான விசேட கலந்துரையாடல் கொழும்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை பணிமனையில் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்குமாறு, சுகாதார துறை சார்ந்த ஆறு அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல சம்பத் , வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் கோ.ரஜீவ் ஆகியோருக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நிமோனியாவால் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

நிமோனியா காய்ச்சலால் மூன்றரை மாத பெண்குழந்தை உயிரிழந்தது.

யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணையை சிவதாசன் றக்ஸ்மி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை குழந்தை பால் குடித்த சில மணிநேரங்களில் அசைவின்றி காணப்பட்டது. இதையடுத்து, பெற்றோர் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் அது ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த குழந்தையின் இறப்புக்கு நிமோனியா காய்ச்சலே காரணம் என்று மருத்துவ பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)





கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் (ஐயனார்) கோவில் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றவேளை...!
(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தே வெற்றி பெறுவார் இந்தியாவின் “றோ” கூறியது

## சொல்கிறார் அசோக அபேசிங்க

கொழும்பு, ஜூலை 22

“ ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றி பெறுவார் என இந்திய உளவு பிரிவான றோ அமைப்புகூட தெரிவித்துள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது.” - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணையவுள்ளனர் என்ற தகவல் ஐக்கிய தேசிய கட்சியினரால் தொடர்ச்சியாக பரப்பட்டுவருகின்றது. அது பொய் என்பது உறுதியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் ஜனாதிபதி பக்கம் வராவிட்டால் அவருக்கு மொட்டு கட்சியின் ஆதரவு கிட்டாது. அதனால்தான் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் இன்று வருவார்கள், நாளை வருவார்கள் என்றெல்லாம் கூறப்படுகிறது.

கட்சிகளை உடைத்து குழப்பத்தை ஏற்படுத்துவது ரணிலுக்கு கைவந்த கலை. அதனால்தான் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்குகூட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமது கட்சியில் இருந்து எவரும் செல்ல வில்லை. சிலர் சென்றால்கூட அது சலுகைக்கான தாவலாகவே இருக்கும்.

தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க மூன்றாவது இடத்திலேயே உள்ளார், மொட்டு கட்சியின் ஆதரவு கிட்டாவிட்டால் நான்காவது இடத்துக்கு தள்ளப்படுவார். இதனால் அவர் போட்டியிடுவது சந்தேகமே.” - என்றார். (ஐ)

# மலையக மக்களை தோட்டம், வீட்டு உரிமையாளராக்குவேன்!

## சஜித் பிரேமதாஸ உறுதியளிப்பு



கொழும்பு, ஜூலை,22

**மலையக - பெருந்தோட்ட உழைக்கும் மக்களுக்கு சிறு நில தேயிலை தோட்டத்துக்கான உரிமையையும் வீட்டுக்கான உரிமையையும் பெற்றுத் தருவேன் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

கண்டியில் நடந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“அண்மைக்காலங்களில் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் சகலரும் மலையக, பெருந்தோட்ட சமூகத்தை பொய்யான கூற்றுகளாலும், வாக்குறுதிகளாலும் ஏமாற்றி வந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பெருந்தோட்ட மக்களின் லயன் அறை வடிவிலான இருப்பிட வசதிகளினாலான வாழ்க்கை முறையையும், தோட்டத் தொழிலாளர்கள் என்ற வாழ்க்கையையும் முடிவுக்குக் கொண்டு வருவேன்.

சிறிய தேயிலைத் தோட்டத்துக்கான உரிமையாளர்களாக்கி, தனது சொந்த தேயிலை தோட்டத்தில் தனக்கென சொந்த வீட்டை நிர்மாணித்து, தேயிலைத் தோட்டத்தை பராமரித்து, சிறுநில தேயிலைத் தோட்ட உரிமையாளராக தேயிலை உற்பத்திக்கு பங்களிப்பதற்கான வரத்தைப் பெற்றுத் தருவேன்.

நிறைவேற்றப்படாத பல தேவைகளையும், தரங்குன்றிய வாழ்க்கை முறையையும் முடிவுக்குக் கொண்டு வருவேன். தேசிய நீரோட்டத்தில் அவர்களைச் சங்கமிக்கச் செய்வேன். அதனாலேற்படும் முன்னேற்றங்களால் பாராபட்சங்களை நீக்கி, செந்த காலில் நிற்கும் யுகத்தை பெருந்தோட்ட மக்களுக்கு உருவாக்கித் தருவேன் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# சிறீதரன், மாவை உள்ளிட்ட நால்வரே வழக்கு ஒத்திவைக்கப்பட காரணம்!

## சுமந்திரன் எம். பி. சாடல்

கொழும்பு, ஜூலை 22

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாக தெரிவு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முடிவுக்கு கொண்டுவர இணக்கம் எட்டப்பட்டது. எனினும், இதன்படி மாவை. சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன் ஆகியோர் உட்பட நால்வர் தரப்பின் சமர்ப்பணங்களை சமர்ப்பிக்கவில்லை. - இவ்வாறு அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த வழக்கு 11 தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வழக்குத் தொடர்பில் கருத்துரைத்த சுமந்திரன் எம். பி.,

கட்சியின் நிர்வாகத் தெரிவுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கை இணக்கப்பாட்டுடன் முடிவுக்கு கொண்டுவருவதென எமது மத்திய செயல்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னர் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 14ஆம் திகதி வவுனியாவில் நடந்த அரசியல் உயர் பீட கூட்டத்திலும் சமர்ப்பணங்கள் தொடர்பான வரைவுகள் எதிராளிகள் - அவர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளிடையேயும் பகிரப்பட்டன.

இந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி மாவை. சேனாதிராசா, யோகேஸ்வரன், சிறீதரன், குகதாசன் ஆகிய நால்வர் சார்பான பதில் சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால், தற்போது வழக்கு 11 தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நால்வரும் இணக்கப்பாடு எட்டியதன் பின்னர் எதற்காக தங்களது சமர்ப்பணங்களை செய்வதற்கு தவறியுள்ளார்கள் என்பது தொடர்பில் இதுவரையில் அறிவிக்கவில்லை - என்றார். (ஐ)

# காணி வழங்கப்படாததாலேயே இந்திய வீட்டு திட்டம் தாமதம்!

## இந்திய தூதுவர் கூறினாரென மனோ கணேசன் தெரிவிப்பு!

கொழும்பு, ஜூலை 22

நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டம் இடை நின்று அல்லது மிக பெரும் தாமதமாக வீடுகள் கட்டப்பட வேண்டிய உரிய காணிகளை இலங்கை தரப்பு இன்னமும் விடுவிக்காமையே. இந்த விவகாரத்தில், இந்திய தரப்பில் எவ்வித தாமதமும் இல்லை என இந்திய தூதர் சந்தோஷ் ஜா தன்னை சந்தித்த தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவரை தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒகஸ்ட் மாத்தில் கட்டி முடிக்கப்படும் என்ற உறுதி மொழியுடன் சுமார் 37. 5 கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 300 வீடுகளை கட்டுவதற்காக பாரத் - லங்கா மலை நாட்டு தோட்ட வீடமைப்பு திட்டம் என்ற பெயரில், கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நான்காம் கட்ட இந்திய வீடமைப்பு திட்டம் இடை நின்று அல்லது மிக பெரும் தாமதமாக வீடுகள் கட்டப்பட வேண்டிய உரிய காணிகளை இலங்கை தரப்பு இன்னமும் விடுவிக்காமையே. இந்த விவகாரத்தில், இந்திய தரப்பில் எவ்வித தாமதமும் இல்லை இந்திய தூதர் சந்தோஷ் ஜா எடுத்து கூறினார்.

வீட்டுத் திட்டம் தவிர, விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில் நுட்ப கல்வி, கணிதம் ஆகிய துறை சார் ஆசிரியர் பயிற்சி - மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகள், பாடசாலை பைகள் வழங்கல், தோட்ட தொழிலாளர் வீடுகளுக்கு சூரிய சக்தி மூலமான விளக்குகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், பாடசாலை பௌதிக கட்டுமானங்கள் போன்ற திட்டங்கள் மலையக மக்களுக்கு இந்திய அரசு வழங்கும் என்று தூதுவர் கூறினார் - என்றார். (ஐ)

# வழக்காளிக்கு நிவாரணம் அளிக்க முதல் நாளிலேயே இணங்கிவிட்டோம்!

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 22

இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிர்வாகத் தெரிவுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் வழக்காளி கோரிய நிவாரணத்தை வழங்கி வழக்கை கைவாங்குவதாக வழக்கு விசாரணைக்கு எடுத்த முதல் நாளிலேயே அறிவித்துவிட்டோம் - என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கட்சியில் ஏற்படுத்திய இணக்கப்பாட்டின் அடிப்படையில் பதில் சமர்ப்பணங்கள் ஒரே நாளில் செய்யப்படவேண்டிய அவசியம் இல்லை - என்றும் அவர் கூறினார்.

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு 11 நாட்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மாவை. சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன் ஆகியோர் உட்பட நால்வர் தரப்பின் சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனாலேயே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது என்று சுமந்திரன் எம். பி. சாடியிருந்தார்.

இது தொடர்பில் சிறீதரன் எம். பியிடம் கேட்டபோது,

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ள வழக்காளியின் கோரிக்கையை ஏற்று அவருக்கான நிவாரணத்தை அளிப்பதாக கடந்த பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி இவ்வழக்கு முதன்முதலாக விசாரணைக்கு எடுத்த போதே நாம் நீதிமன்றுக்கு அறிவித்துவிட்டோம்.

அதன் பின்னர் இடையீட்டு மனுதாரர்கள் கொண்டுவரப்பட்டார்கள். தொடர்ச்சியாக கட்சிக்குள் அதுபற்றி கலந்துரையாடினோம். அந்த வகையில் கட்சியை நீதிமன்றில் இருந்து விடுவிப்பதற்காக எனது தலைமைத் தெரிவு உள்ளிட்ட கட்சியின் மூலக்கிளை தெரிவு முதல் அனைத்து பதவி நிலைகளையும் மீண்டும் மேற்கொள்வதற்கும் இணக்கம் வெளியிட்டிருந்தேன்.

இந்நிலையில், வவுனியாவில் அரசியல் உயர்பீடம் கூட்டப்பட்டு பதில் சமர்ப்பணங்கள் தொடர்பில் உரையாடல்கள் நடைபெற்றது. அந்த வகையில் எதிராளிகள் சார்பில் பதில் சமர்ப்பணங்கள் செய்யப்படும் என்ற இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில், நான்கு எதிராளிகளால் சமர்ப்பணங்கள் அளிக்கப்பட்டுள்ளன. நான் உட்பட ஏனைய நால்வரும் ஏலவே, மன்றுக்கு வழக்காளியின் கோரிக்கையை ஏற்பதற்கு தயார் என்பதை அறிவித்துவிட்டோம். அதற்கு மேலதிகமாக தேவையென்றால் சமர்ப்பணங்களை வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம்.

இதேநேரம், பதில் சமர்ப்பணங்களை அனைவரும் ஒரே நாளில்தான் அளிக்க வேண்டும் என்றில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பதில் சமர்ப்பணங்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டிருக்காதிருப்பது முக்கியமானது - என்றார். (ஐ)

# கொழும்பில் பணியிலிருந்த இளைஞரை காணவில்லை!

## மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொழும்பில் பணியிலிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனை காணவில்லை என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாயை சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்பில் பணியாற்றி வந்துள்ளார். விடுமுறைகளின் போது அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வது வழமை. இதனிடையே, கடந்த ஒரு வார காலமாக அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இதையடுத்து, அவரின் குடும்பத்தினர் கொழும்பில் அவர் பணியாற்றிய இடத்தில் விசாரித்துள்ளனர். அவர் தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், இளைஞர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூ. 79,650 கோடி கடன் பெற்றது அரசு

கொழும்பு, ஜூலை 22

**நடப்பு ஆண்டில் முதல் 4 மாதங்களில் 79 ஆயிரத்து 650 கோடி ரூபாயை அரசாங்கம் கடனாகப் பெற்றுள்ளது. பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு வெளியிட்டுள்ள மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இந்த விடயம் வெளிப்பட்டது.**

இந்த காலப்பகுதியில் கடன் சேவை மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக உள்நாட்டு கடனாக 73 ஆயிரத்து 420 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. வெளிநாட்டு திட்டக் கடனாக 6 ஆயிரத்து 230 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் உள்நாட்டு கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காக 69 ஆயிரத்து 210 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காக செலவிடப்பட்ட தொகை 3 ஆயிரத்து 400 கோடி ரூபாயாகும்.

இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில், நாட்டின் கடன்களில் தோராயமாக 92.2 சதவீதம் உள்நாட்டிலிருந்து பெறப்பட்டவை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அநுராதபுரம் விபத்தில் மூன்று பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 22

அநுராதபுத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற மூன்று விபத்துகளில் சிறுமி ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

அநுராதபுரம் புளியங்குளம், கெக்கிராவை, வஹமல்கொல்லேவை பகுதிகளில் இந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

அநுராதபுரம் - புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 65 வயது நபரே உயிரிழந்தார். கார் சாரதியாக பணியாற்றி வந்த அவர் புளியங்குளம் கோவில் அருகே இவர் நடந்து சென்றபோது பட்டா ரக வாகனம் மோதி உயிரிழந்தார்.

ஏ - 9 வீதியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் 12 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார். அவரின் சகோதரன் பெற்றோர் என மூவர் படுகாயமடைந்தனர்.

கெக்கிராவை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 62 வயது நபரே உயிரிழந்தார். (ஐ)



# ஆடிவேல் விழாவில் 12 தேர்கள் பசறை நகரில் ஒன்றாக சங்கமம்!

கொழும்பு, ஜூலை 22

பதுளை மாவட்டத்தின் பசறை நகரில் 12 தேர்கள் நேற்று முன்தினம் இரவு ஒன்றாக சங்கமித்தன.

பசறையின் வரலாற்று சிறப்புமிக்க சின்னக்கதிர்காமம் என போற்றப்படும் அம்மணிவத்தை கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், பசறை நகர் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், கிக்கிரிவத்தை கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், எல்டெப் சிவ சுப்ரமணிய கோயில், கோணக்கலை கீழ்பிரிவு தோட்ட முருகன் கோயில், டெமேரியா மாத்தன்னை தோட்ட கதிர் வேலாயுத சுவாமி கோயில், கோணக்கலை மேற்பிரிவு முருகன் ஆலயம், கல்குடாவத்தை முருகன் ஆலயம் ஆகியவற்றின் தேர்களே இவ்வாறு பசறை நகரை வலம் வந்தன.

இதில் பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டில் அதிக எண்ணிக்கையான தேர்கள் சங்கமிக்கின்ற சிறப்புமிக்க கலாசார நிகழ்வாக கடந்த 1965ஆம் ஆண்டு முதல் இந்த நிகழ்வு நடைபெற்று வருவது அறிந்ததே. (ஐ)

# சகலரையும் திசை திருப்பவே 22ஐ ரணில் பயன்படுத்துகிறார்!

## தேசிய மக்கள் சக்தி




கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மக்களையும் எதிர்க்கட்சிகளையும் திசை திருப்புவதற்கே அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை பயன்படுத்துகிறார் என்று தேசிய மக்கள் சக்தியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 வருடங்களாக உறுதிப்படுத்தும் நோக்குடன் 22 ஆவது திருத்தச்சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ள நிலையில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தல் தொடர்பில் அச்சமான மனோநிலை காணப்படுகிறது. அதனால் தேர்தலை தாமதப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார். ஆனால், அதற்கான அவகாசம் தற்போது அவருக்கு இல்லாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. ஆகவே நிச்சயமாக தேர்தல் நடைபெறவுள்ளது.

இவ்விதமான நிலையில், 22ஆவது திருத்த சட்டமூலத்தை அடுத்த பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்படவில்லை. அவ்வாறு உள்வாங்கப்பட்டாலும்கூட அரசாங்கத்தால் அதனை நிறைவேற்ற முடியாது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை. எதிர்க்கட்சிகள் தற்போதைய நிலையில் அரசமைப்பு திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆதரவளிக்கும் நிலைமையில் இல்லை.

ஆகவே, அரசாங்கத்தால் 22ஆவது திருத்தச்சட்ட மூலத்தை கொண்டு வந்தாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது.

எனவே, வர்த்தமானி அறிவித்தலுடன் அது நிறுத்தப்பட்டுவிடும். அவ்வாறில்லாது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும் அது புஷ்வாணமாகும் நிலையே உள்ளது. அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மக்களையும் எதிர்த்தரப்பு அரசியல் குழுக்களையும் திசை திருப்புவதற்காகவே 22ஆவது திருத்தச்சட்ட மூலத்தை பயன்படுத்துகிறார் - என்றார். (ஐ)

# பாதுகாப்பு கற்கை நிறுவன முன்னாள் பணிப்பாளர் கைது!

கொழும்பு, ஜூலை 22

தேசிய பாதுகாப்பு கற்கை நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் அசங்க அபேகுணசேகர நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டார்.

இவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய இறைவரி திணைக்களத்தின் விசாரணை தொடர்பில் நீதிமன்றத்தால் பயணத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அசங்க கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# 31 ஆயிரம் கடந்த டெங்கு நோயாளர்

கொழும்பு, ஜூலை 22

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 31 ஆயிரத்து 17 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். இங்கு 12 ஆயிரம் 153 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 12 பேர் டெங்கு நோயால் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகமாக உள்ளதால் பொதுமக்கள் தங்களது வீட்டுச் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்வதில் அவதானம் செலுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# மாணிக்கக்கல் அழ்வில் ஈடுபட்ட 12 பேர் கைது!

நுவரெலியா, ஜூலை 22

வனப்பகுதியில் மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்ட 12 பேர் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை மாஎலிய வனப் பகுதியில் மாணிக்க கற்களை அகழ்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பொகவந்தலாவையில் பொலிஸார் மற்றும் அதிரடி படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை ஹற்றன் நீதிமன்றில் முற்படுத்த பொகவந்தலாவை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# முட்டை இறக்குமதி செய்ய கவனம் செலுத்தும் அரசு!

கொழும்பு, ஜூலை 22

முட்டைகளை இறக்குமதி செய்வது தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று உணவு மற்றும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து அதிகரித்து வரும் முட்டை விலையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உற்பத்தியாளர்கள் முட்டையின் விலை உயர்வைத் தக்க வைக்க, சந்தைக்கு வெளியிடப்படும் முட்டையின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தியும் முட்டை உற்பத்தியை கட்டுப்படுத்தியும் வருவதாகவும் கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்து வருவருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

# பங்களாதேஷில் வன்முறை உச்சம்: 50 இலங்கை மாணவர்கள் டாக்காவில் சிக்கியுள்ளனர்

கொழும்பு, ஜூலை 22

பங்களாதேஷில் வன்முறைகள் வெகுவாக அதிகரித்துள்ளன. இந்த சூழ்நிலையில் இலங்கையை சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தலைநகர் டாக்காவில் சிக்குண்டுள்ளனர்.

பங்களாதேஷில் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இணைய, தொலைபேசி சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் டாக்காவிலும் சிட்டகொங்கிலும் பல்கலைகழகங்களில் சிக்குண்டுள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கோரும் கடிதங்களை இலங்கை மாணவர்கள் கல்வி கற்கும் பல்கலைகழகங்களுக்கு பங்களாதேஷுக்கான இலங்கை தூதுவர் தர்மபால வீரக்கொடி அனுப்பிவைத்துள்ளார்.

மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் தூதுவர் தொடர்பிலிருக்கின்றார் என்று வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனார் படுகொலை மருமகன் தலைமறைவு

## அதிகாலையில் நடந்த பயங்கரம்



**சாய்ந்தமருது, ஜூலை 22**

**மகளை விவாகரத்து செய்ய முற்பட்ட மருமகனுடன் தர்க்கப்பட்ட மாமனாரை அடித்துப் படுகொலை செய்த போதைப் பொருளுக்கு அடிமையான இளம் குடும்பஸ்தர் தலை மறைவாகியுள்ளார்.**

மருமகனின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த மாமனாரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் கிராமத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன் 32 வயது சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்.

திருமணமான தனது மகளை விவாகரத்து செய்ய தயாரான மருமகனுடன் ஏற்பட்ட முரண்பாடே கொலையில் முடிந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து தனது மாமாவுடன் தகராறு செய்து வந்த மருமகன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிய வந்துள்ளது.

கொலைச் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல். புத்திக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் அம்பாறையில் இருந்து வரவழைக்கப்பட்ட தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தச் சம்பவத்தில் மரணமடைந்த 62 வயதுடைய மீரா சாஹிப் சின்னராசா என்பவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)



# சாரண ஆசிரியர்களுக்கான ஆணைப் பத்திரம் வழங்கல்

கல்முனை, ஜூலை 22

கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான ஆணைப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவர் கலாநிதி எஸ். எல். றியாஸ் பிரதம விருந்தினராகவும், ஆலோசகர்களான முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் யூ. எல். எம். ஹாசிம், முன்னாள் மாவட்ட ஆணையாளர் எஸ். ரவீந்திரன், ஊடக இணைப்பாளரும், உதவி மாவட்ட ஆணையாளருமான எம். எப். நிபாஸ் உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்களும் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர்

நான்கு கல்வி வலயங்களில் இருந்தும் சுமார் இருபதுக்கு மேற்பட்ட சாரண ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கான சாரண ஆணைப் பத்திரங்களும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

# விலங்குக்கு வைத்த பொறி வெடித்ததால் பெண் படுகாயம்!

திருகோணமலை, ஜூலை 22

காட்டில் விறகு வெட்டச் சென்ற பெண் விலங்குகளை பிடிக்க வைத்த பொறியில் சிக்கி படுகாயமடைந்துள்ளார்.

திருகோணமலை - கும்புறுப்பிட்டியை சேர்ந்த பெண்ணே இவ்வாறு காயமடைந்து திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விலங்குகளை வேட்டையாட வைக்கப்பட்ட பொறியின் கொக்கி நாடாவை பெட்டியை திறந்தபோது அது வெடித்ததில் அவர் படுகாயமடைந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு

# இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபா வழங்க கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 22

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால கொடுப்பனவாக மாதாந்தம் 5,000 ரூபாயை அரசாங்கம் வழங்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாட்டில் கோவிட் தொற்று ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் பெருந்தோட்ட மக்கள் பொருளாதார பின்னடைவை சந்தித்திருந்தனர். ஏனைய சமூகத்தினருக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கிய போதும் பெருந்தோட்ட மக்கள் அரச அதிகாரிகளால் நிராகரிக் கப்பட்டிருந்தனர். அவர்கள் வேலைக்கு செல்வதாகவும், அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படுவதாலும் அவர்களுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்க முடியாது எனவும் அரச அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் அப்போதைய பிரதமரின் இணைப்புச் செயலாளராக இருந்த செந்தில் தொண்டமான், இந்தப் பிரச்னை குறித்து பிரதமரின் கவனத்துக்கு கொண்டு சென்று, 5000 ரூபாய் வழங்குவதற்கான நியாயமான அரச ஆவணங்களைப் பிரதமரிடம் சமர்ப்பித்து, இந்த நிவாரணத் தொகையை பெருந்தோட்ட மக்களுக்கு வழங்க ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரி செயலாளர் ஆகியோருடன் பல முறை கலந்துரையாடி மலையகம் முழுவதும் குறித்த தொகையை இடைக்கால நிவாரணமாக பெற்றுக் கொடுத்திருந்தார்.

தற்போது 1,700 ரூபாய் சம்பளம் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வரை இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபாய் வழங்க மாவட்ட ரீதியாக தொழிலாளர்களின் பட்டியல், நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிக்கை, தற்காலிக தொழிலாளர்கள் எண்ணிக்கை என அனைத்து ஆவணங்களையும் செந்தில் தொண்டமான் ஜனாதி பதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை விரைவாக ஆய்வு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். (எ)

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள்

கல்முனை, ஜூலை 22

"டயக்கோனியா" மற்றும் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அனுசரணையில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

திட்ட இணைப்பாளரும், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபருமான ஏ. ஜி. எம். றிஷாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளைஞர், யுவதிகள் மத்தியில் எவ்வாறு போதைப் பொருள் பாவனை பரவலாக்கப் படுகின்றன, அவை எவ்வாறான முறைகளில் விஸ்தரிக்கப்படுகின்றன என்பன தொடர்பில் நாடகங்கள், போதையினால் உண்டாகும் தீமைகள், அதனால் நாம் எவ்வாறு பாதிக்கப் படுகின்றோம் என்பதனை எடுத்துக்காட்டும் வில்லுப்



பாட்டு மற்றும் இஸ்லாமிய கசீதா, உரையாடல் என பல நிகழ்வுகள் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எச். எம். ஜாபிர், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொதுப் பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ. வாஹிட், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ. சீ. ஏ. அசிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைதீவு விவேகானந்தா மத்திய கல்லூரி, கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயம், கல்முனை இராம கிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலயம், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி மற்றும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகள் இதில் பங்கேற்று நிகழ்ச்சிகளை அரங்கேற்றின.

# வயலில் எரிந்த நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டது

திருகோணமலை, ஜூலை 22

திருகோணமலை, தம்பலகாமம் பகுதியில் எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.



தம்பலகாமம், கூட்டாம்புளி பகுதியில் சடலம் ஒன்று காணப்படுவதாக அந்தப் பகுதி விவசாயிகளால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பேரில் நேற்று முந்தினம் மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டது.

சடலத்துக்கு அருகே அடையாள அட்டை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ள தாகவும், அதன் அடிப்படையில் உயிரிழந்த நபர் தம்பலகாமத் தைச் சேர்ந்த அன்புவழி புரத்தில் திருமணம் முடித்தவர் எனத் தெரிய வந்தது. இவர் அண்மைக் காலமாக பிரான்ஸில் வசித்து வந்தவர் என்றும் திருமண நிகழ்வொன் றுக்காக சில நாட்களுக்கு முன்னர் சொந்த மண்ணுக்கு வந்திருந்த நிலையிலேயே உயிரிழந் தார் என்றும் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளில் தம்பலகாமம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருத்ர தாண்டவமாடும் இஸ்ரேல் இராணுவம்

## காஸா, யேமன், லெபனான் மீது இரவு பகல் பாராது தாக்குதல்



ஜெருசலேம், ஜூலை 22

ஒரே நேரத்தில் லெபனான், ஏமன், காஸா என மூன்று பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் இடைவிடாது இரவு பகல் பாராது தொடர் தாக்குதல் நடத்தியது, மத்திய கிழக்கு பகுதியில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

காஸா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காஸாமுனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதனையடுத்து ஹமாஸ் போராளிகள் குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணய் கைதிகள் 100 இற்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளது. ஆனால், 100 இற்கும் மேற்பட்டோர் இன்னும் பணயக் கைதிகளாக ஹமாஸ் பிடியில் உள்ளதாகவும், அதில் சிலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும், காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தப் போரில் காஸாவில் ஹமாஸ் குழுவினர் உட்பட 38 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோன்று, மேற்கு கரையில் ஏற்பட்ட மோதலில் 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். காஸா முனையில் இஸ்ரேல் படையினரும் 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் ஹமாஸ் குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் ஆதரவு அளித்து வருகின்றனர். இந்த குழுக்கள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் இராணுவம் பதிலடி கொடுத்து வருகிறது. அந்த வகையில் கடந்த சில நாட்களுக்கு முன் இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவ் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி குழு பொறுப்பேற்றது. இதனால் ஆத்திரமடைந்த இஸ்ரேல் இராணுவம் காஸா முனை, ஏமன், லெபனான் ஆகிய பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது. ஏமனின் துறைமுக நகரமான ஹூடைடா மீது இஸ்ரேல் விமானப் படை தாக்குதல் நடத்தியது. ஹூடைடா நகரில் உள்ள எரிபொருள் சேமிப்பு கிடங்கு, ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஆயுதக்கிடங்கு, மின் நிலையம் உட்பட பல்வேறு பகுதிகளின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர். மேலும், 87 பேர் படுகாயமடைந்தனர். அதே போன்று காஸா முனையின் நஸ்ரத் முகாம், ரபா உட்பட பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் விமானப் படை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஹமாஸ் குழுவினர் உட்பட 39 பேர் உயிரிழந்தனர். இதே வேளை, லெபனானின் அட்லோன் பகுதியில் உள்ள ஹிஸ்புல்லா குழுவினரின் ஆயுதக் கிடங்கை குறிவைத்து இஸ்ரேல் விமானப் படை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் மூவர் காயமடைந்தனர். இவ்வாறு இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்களை தீவிரப் படுத்தியுள்ளதால் உயிரிழப்பு, பதற்றம் அதிகரித்துள்ளது.

(எ)



# கனமழை வெள்ளத்தால் பாலம் இடிந்து விபத்து!

## 15 பேர் பலி; 30 பேர் மாயம்

பீஜிங், ஜூலை 22

நெடுஞ்சாலை பாலம் இடிந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர். சீனாவின் ஷங்ஜீ மாகாணம் ஷங்லோ நகரில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது. மழை காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஹசுய் பகுதியில் பாயும் ஜின்கியூன் ஆற்றின் குறுக்கே நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த மேம்பாலத்தில் கார், மோட்டார் சைக்கிள்கள் பயணித்து வந்தன. ஆனால், கனமழையால் ஜின்கியூன் ஆற்றில் திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன்போது, மேம்பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதில், வாகனங்களில் பயணித்தவர்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து தகவலறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களைத் தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, இந்த விபத்தில் இதுவரை 15 பேர் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர். மேலும், 30 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட பலரும் உயிரிழந்திருக்கலாம் என்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. (எ)

# உக்ரைன் மீதான ரஷ்ய போரை முடிவுக்கு கொண்டு வருவேன்

## உக்ரைனுக்கு உறுதியளித்த ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூலை 22

உக்ரைன் மீது ரஷ்யா முன்னெடுத்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கிக்கு உறுதியளித்துள்ளார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். இந்த தேர்தலை முன்னிட்டு, பல்வேறு வெளிநாட்டு தலைவர்களிடம் ட்ரம்ப் ஆதரவு கேட்டு பேசி வருகிறார்.

இந்த நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி மற்றும் ட்ரம்ப் இருவரும் தொலைபேசி மூலம் உரையாடினர். இது குறித்து ட்ரம்ப் வெளியிட்ட சமூக ஊடக பதிவில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியும் நானும் பேசிகொண்டோம். எங்களுடைய உரையாடல் நன்றாக இருந்தது. அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான குடியரசு கட்சிக்கான வேட்பாளராக நியமிக்கப்பட்டதற்காக, எனக்கு அவர் வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார். அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாக உலகத்துக்கு நான் அமைதியை கொண்டு வருவேன். பல உயிர்களை பலி வாங்கி, எண்ணற்ற குடும்பத்தினரை துன்பத்தில் ஆழ்த்திய போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இந்த உரையாடலின்போது, ட்ரம்ப் மீது நடந்த படுகொலை முயற்சிக்கான தாக்குதலுக்கு அவர் ஜெலென்ஸ்கி கண்டனம் தெரிவித்து கொண்டார் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் தள பதிவில், ரஷ்ய பயங்கரவாதத்துக்கு எதிரான எங்களுடைய திறனை வலுப்படுத்த உதவியதற்காக, அமெரிக்காவுக்கு உக்ரைன் எப்போதும் நன்றியுடன் இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.(எ)

# அமெ. ஜனாதிபதி தேர்தல்; பைடன் விலகல்?

## குடும்பத்தினர் பரிசீலனை

வாஷிங்டன், ஜூலை 22

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து ஜோ பைடன் விலகலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில், அவரின் தடுமாற்றமான பிரசாரம் காரணமாக போட்டியில் இருந்து அவர் வெளியேறுவது நல்லது என்பது குறித்து பைடனின் குடும்பத்தினர் பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு பைடன் போட்டியில் இருந்து விலகும் பட்சத்தில், அது அவரது ஐந்து தசாப்த பொதுச் சேவையை கௌரவிப்பதோடு மட்டும் இல்லாமல், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை வெல்ல ஜனநாயக் கட்சியை சிறப்பாக நிலைநிறுத்தவும் செய்யும் என்றும் ஜனநாயக கட்சியினர் நம்புகின்றனர்.

இந்த விலகல் விவகாரத்தில் ஜோ பைடனின் உடல்நிலை, அவரது குடும்பம், நாட்டின் ஸ்திரத்தன்மை போன்றவை முக்கிய காரணிகளாக இருக்கும் என்று கூறப்படுகிறது. சில வாரங்களுக்கு முன்பு நடந்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான விவாதத்தில் ஜோ பைடனின் தடுமாற்றத்தைத் தொடர்ந்து, கட்சித் தலைவர்கள், நன்கொடையாளர்கள், பைடனை மீண்டும் தெரிவு செய்த குழுவினரிடையே ஓர் அமைதியின்மை ஏற்பட்டுள்ள நிலையில் இந்த விவகாரம் கவனம் பெற்றுள்ளது.

அமெரிக்க பாராளுமன்றத்தின் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் 25 பேர் ஜோ பைடன் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலக வேண்டும் என்று வெளிப்படையாக தெரிவித்துள்ளனர். தற்போது கொரோனா தொற்று காரணமாக 81 வயதான ஜோ பைடன் தனது டெலாவர் இல்லத்தில் தனிமையில் ஓய்வு எடுத்து வருகிறார்.

இந்த நிலையில் ஜனநாயகத்தை காப்பாற்ற அடுத்த வாரம் பிரசாரத்துக்குத் திரும்புவேன் என்று ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

(எ)

# 161 ஊடகவியலாளர்கள் காஸாவில் உயிரிழப்பு!

காஸா, ஜூலை 22

காஸா போரில் உயிரிழந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 161 ஆக அதிகரித்தது. இதேவேளை, இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 37 பேர் உயிரிழந்தனர். மேலும் 54 பேர் காயமடைந்ததாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. ஜபாலியாவில் உள்ள வீட்டில் ஊடகவியலாளர் முஹம்மது அபு ஜாசர், அவரது மனைவி மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, காஸாவில் உயிரிழந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 161 ஆக அதிகரித்தது.

இந்த நிலையில், ஓமன் வெளிவிவகார அமைச்சு தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பலஸ்தீன நிலத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பது சர்வதேச சட்டத்தை மீறும் செயலாகும்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு செயல்பாடுகளை விரைவில் முடிவுக்கு வரவேண் டும் என்றும் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தை கலைத்தாலும்கூட ஜனாதிபதி தேர்தலை அறிவிக்கலாம்!

## தேர்தல்கள் மேலதிக ஆணையாளர்

கொழும்பு, ஜூலை 22

**தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும்கூட தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க முடியும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை பாராளுமன்ற கலைப்பு பாதிக்காது - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்தார்.**

நேற்று கொழும்பு வானொலி ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ஒரே நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்வதற்கான இயலுமை உள்ளது”, என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நீதி அமைச்சர் விஜயதாசவுக்கும் இடையே அண்மைக்காலமாக விரிசல் காணப்பட்டது. இந்த நிலை யில் கடந்த வெள்ளிக்கிழமை காலியில் நடந்த நிகழ்வு ஒன்றில் இருவரும் இயல்பாக அளவளாவிய தருணம்...!

# போதைப்பொருட்களால் 40 ஆயிரம் மரணங்கள்!

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் போதைப்பொருள் பாவனை சார்ந்து ஆண்டுதோறும் 40 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று அபாயகர ஔடதங்கள் தேசிய கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

புகையிலை பாவனையால் சுமார் 20 ஆயிரம் பேரும், மது பாவனையால் 18 ஆயிரம் பேரும், மற்ற போதைப்பொருள் பாவனையால் சுமார் 2 ஆயிரம் பேரும் உயிரிழக்கின்றனர் என்று தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து பிள்ளைகளை பாதுகாப்பது பெற்றோரின் பொறுப்பு என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 19இல் ஜயம்பதி விட்ட தவறையே 22இல் திருத்த ஜனாதிபதி முயற்சி!

## எஸ். பி. திஸநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன விட்ட தவறை 22ஆவது சட்டமூலம் ஊடாக திருத்தம் செய்ய ஜனாதிபதி முயற்சிக்கிறார். ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் மயக்க நிலை காணப்படுவதால்தான் மூன்று முறை ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து உயர்நீதிமன்றத்தில் மூன்று முறை வியாக்கியானம் கோரப்பட்டது, ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்று உயர்நீதிமன்றம் மூன்று முறையும் தெளிவாக வியாக்கியானம் வழங்கியுள்ளது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் அவசர அவசரமாக தயாரிக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன விட்ட தவறை திருத்தம் செய்வதற்காகவே ஜனாதிபதி அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை சமர்ப்பித்துள்ளார். ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்பதில் காணப்படும் சர்ச்சையை நிவர்த்தி செய்வது இந்த சட்டமூலத்தின் பிரதான நோக்கமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பணிகளை தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக முன்னெடுக்கிறது. தேர்தல் ஆணைக்குழுவுடன் ஜனாதிபதி ஒருபோதும் கலந்துரையாடவில்லை என ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஆகவே, 22ஆவது திருத்த சட்டமூலம் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஜனாதிபதியின் சிறந்த திட்டங்களினால் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து குறுகிய காலத்தில் மீண்டது என்பதை அரசியலுக்கு அப்பால்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து நிலையான மீட்சி பெற வேண்டுமாயின் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் - என்றார்.

# தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரணில், தம்மிக அறிவிக்கவில்லை!

## சிறீ லங்கா பொதுஜன பெரமுன



கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது தொழிலதிபர் தம்மிக பெரேராவோ அல்லது வேறு எவரும் உத்தியோகபூர்வமாக கட்சிக்கு எழுத்து மூலம் அறிவிக்கவில்லை என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சரியான நேரத்தில் வேட்பாளர் நியமனம் செய்யப்படுவார். நாட்டின் கடனை செலுத்துவதற்காக உள்நாட்டு வளங்களை விற்காத ஒருவரே சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராவார். வேட்பாளர்களை எதிர்பார்த்து பலர் கட்சியுடன் கலந்துரையாடப்படுகிறது என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ)

# சிறை முகாமைத்துவ அதிகாரிகள் 900 பேரை இணைப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 22

சிறைச்சாலைகளில் சுமார் 1,700 முகாமைத்துவ அதிகாரிகளுக்கு பற்றாக்குறை உள்ளது. இதன்படி, சுமார் 900 பேரை சேவையில் இணைத்துக் கொள்ள திணைக்களத்தால் தற்போது அனுமதி கிடைத்துள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளரின் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

“யுக்திய” நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் 26 ஆயிரத்து 500 ஆகக் காணப்பட்ட சிறைக்கைதிகளின் எண்ணிக்கை தற்போது 30 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இதனால், சிறைச்சாலை முகாமைத்துவ அதிகாரிகளின் தேவை அதிகரித்துள்ளது.

அத்துடன், சிறைச்சாலைகளில் முகாமைத்துவ அதிகாரிகள் பற்றாக்குறையானது நீண்ட காலமாக காணப்படுகிறது. புதிய முகாமைத்துவ அதிகாரிகளை இணைப்பதால் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்றும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்

## ரயில்துறையினரை எச்சரித்த பந்துல

கொழும்பு, ஜூலை 22

ரயில் ஊழியர்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டால் சேவையில் இருந்து விலகியவர்களாகக் கருதப்படுவர் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரித்துள்ளார்.

நுவரெலியா - ஹற்றன் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “நாம் அனைவரும் நாட்டின் சட்டங்களை மதிக்க வேண்டும், இல்லையெனில், நாம் பொது சேவை செய்ய



முடியாது. ரயில் சேவை அத்தியாவசிய சேவை என வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. ரயில் துறை ஊழியர்களுக்கு ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால் அது தொடர்பில் கலந்துரையாட அவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது” என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# ஏ9 வீதி விபத்தில் நால்வர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 22

எரிபொருள் ஏற்றிச் சென்ற பௌசரும் ஓட்டோவும் மோதிய விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்துடன், எரிபொருள் பௌசர் அருகிலிருந்த வயலுக்குள் கவிழ்ந்தது.

யாழ். - கண்டி ஏ-9 நெடுஞ்சாலையில் அநுராதபுரம் இகிரியகொல்லேவ பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை தெரிவித்தது. (ஐ)

# போதைப்பொருள் கடத்தலை வழிநடத்திய மூன்று பேர் கைது!

## கைதானவர்களில் ஒருவர் தமிழர்

கொழும்பு, ஜூலை 22

பாதாள உலகக்கும்பலின் தலைவர் கஞ்சிபான இம்ரானின் போதைப்பொருட்கள் கடத்தலை வழிநடத்திய தமிழர் மற்றும் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராகம, வெலிசறை, வெல்லம்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல் காரனுமான கஞ்சிபான இம்ரானின் போதைப்பொருள் கடத்தலை செல்வகுமார் ரஞ்சித் என்பவர் வழிநடத்தி வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, பாதாள உலகக் குழுத் தலைவர் கஞ்சிபான இம்ரானுக்கு எதிராக சர்வதேச பொலிஸார் ஏற்கனவே சிவப்பு பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

அதிபர் அதிக அவதானம் செலுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று வெளிநாட்டு புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனரென அந்தக் கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகருக்கு முறையிட்டிருந்தார்.

இதன்படி, சபாநாயகர் பொலிஸ்மா அதிபரை அழைத்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடிய நிலையில், வேட்பாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் குறித்த அறிக்கையை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழ்...

விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, பொ. ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகளும் தமிழ் பொது அமைப்புக ளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையும் இந்த உடன்பாடிக்கையில் கைச்சாத்திடவுள்ளன.

தமிழ்த் தேசிய பேரவை உருவாக்குவது தொடர்பிலான இணக்கம் முன்னரே எட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 6ஆம் திகதி மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் காலமானதைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் பிற்போடப்பட்டது.

இந்த நிலையில், உடன்படிக்கை இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் கைச்சாத்திடப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## செப்.21ஆம்...

எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும் தேர்தல் செப்ரெம்பரிலேயே நடத்தப்படலாம். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 16 முதல் 21 நாட்களுக்குள் வேட்புமனுக்கள் பெறப்படவேண்டும். 28 முதல் 42 நாட்களுக்குள் தேர்தல் நடைபெறவேண்டும். இதன் மூலம் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையகத்துக்கு 63 நாட்களை வழங்க முடியும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலில்...

எனினும், பெரமுன கட்சி ஜனாதிபதி ரணிலை ஆதரிக்க விரும்புகிறது. ஆனால், அவர் மொட்டு சின்னத்தில் களமிறங்கினாலே ஆதரவளிக்க முடியும் என்று அந்தக் கட்சியினர் வலியுறுத்துகின்றனர். ஆனால், பெரமுன சார்பில் போட்டியிட ஜனாதிபதி ரணில் விரும்பவில்லை.

இவ்வாறான நிலையிலேயே வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காது தனித்து வேட்பாளரை நிறுத்துவதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக நிலைமைகள் குறித்து மொட்டு கட்சி ஆராய்ந்தது.

மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடந்த இந்த கலந்துரையாடலில் பொதுஜன பெரமுன வாய்ப்பளிக்கும் பட்சத்தில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க தான் தயாராக உள்ளார் என்று தம்மிக பெரேரா மீண்டும் தெரியப்படுத்தினார்.

தம்மிக பெரேராவுக்கு ஆதரவளிப்பதிலோ - ஜனாதிபதி வேட்பாளர் அந்தஸ்தை வழங்குவதிலோ எவ்விதமான பிரச்னையும் இல்லை என்று தெரிவித்துள்ள பஸில் ராஜபக்ஷ தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பு அடுத்த வாரத்துக்குள் வந்துவிடும். அதற்கு பின்னர் தீர்மானிக்கலாம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தலில்...

உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

வட, கிழக்கு தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் முன்னிறுத்த வேண்டும் என்ற நிலைக்கு எம்மைக் கூட்டி வந்துள்ளன. ஒஸ்லோ தீர்மானம், சிங்கள வாக்காளரிடையே வளரக்கூடிய வெறுப்பு நிலை என்றெல்லாம் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தவர்கள் தற்போது போதிய அளவு ஆதரவு வாக்குகளை பொது வேட்பாளர் பெறாவிட்டால் என்ன நடக்கும் என்று கேள்வி எழுப்பி வருகின்றார்கள். தேர்தல் போட்டி ஒன்றில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர் "நான் கட்டாயம் தோற்கப் போகின்றேன்" என்ற மனோநிலையுடன் போட்டியிடுவதில்லை. "மக்களை என் பக்கம் திருப்ப முடியும் அவர்களின் வாக்குகளைப் பெற முடியும்" என்று எண்ணியே தேர்தலில் நிற்கின்றார். இவ்வாறான முரண்நிலைகளில் நின்று கருத்துரைப்பவர்கள் தாமும் சேர்ந்து பொது வேட்பாளருக்கு ஆதரவைத் தெரிவித்தால் என்ன நடக்கும் என்று சிந்திப்பதில்லை. முரண் நிலைகளில் நிற்கும் எமது சகோதர சகோதரிகள் யாவரும் எமது தமிழ் உறவுகளே. ஆகவே, நாம் யாவரும் தமிழர்களாக எமது வருங்காலம் பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

முரண்நிலைகளில் நின்று அடம் பிடிப்பது தமிழர்களின் பிறவிக்குணம். தான் மற்றவரிலும் பார்க்கக் கெட்டிக்காரன் என்று உலகுக்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற ஏக்கமே இவ்வாறான நடத்தைக்குக் காரணமோ நான் அறியேன். எது எவ்வாறு இருப்பினும் நாம் யாவரும் தமிழர்களாக சிந்தித்தால் எமது வாரிசுகளின் வருங்காலம் பற்றிய கரிசனை எம்மை கட்டாயமாக ஆட்கொள்ளும். "நாங்கள் இன்று சொகுசாக வாழ்ந்துவிட்டு போவோம், நாளை எமது பிள்ளைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் என்ன நடந்தால் எமக்கென்ன" என்று சிந்திப்பவர்கள் தான் பல பிழையான கருத்துகளை தமிழ் மக்களிடையே விதைத்து வருகிறார்கள். அதுவும் கொழும்பில் எனது தமிழ் நண்பர்களின் சிந்தனை பொதுவாக ஒரேவாறாகச் செல்வதை நான் காண்கின்றேன். அவர்கள் என்னிடம் கேட்டதுண்டு - "நாங்கள் யாவரும் இலங்கையர்கள் தானே? ஏன் நாங்கள் தமிழர்களாகச் சிந்திக்க வேண்டும்?" என்று.

அவர்களுக்கு நான் கூறும் பதில் ஒன்றுதான். "நாம் ஒரு நாட்டு மக்கள் என்பதில் எந்தவித முரண் கருத்துக்கும் இடமில்லை. ஆனால், வட,கிழக்கு மாகாண தமிழ் மக்கள் வெறும் சிறுபான்மையினர் அல்ல. அவர்கள் வட, கிழக்கின் பெரும்பான்மையினர். ஆகவே, எமக்கான தனித்துவத்தை பெரும்பான்மையினர் ஏற்காது இவ்வாறு கூறினால் "நீங்கள் எங்களுடன் சேருங்கள். எங்களுடன் ஐக்கியமாகி விடுங்கள்" என்பதுதான் அதன் அர்த்தம். அதாவது எமது தனித்துவத்தை நாங்கள் மறந்துவிட வேண்டும். கூடிய விரைவில் இந்நாட்டு மக்கள் யாவரும் சிங்கள - பௌத்தர்களாக மாற வேண்டும் என்பதே அதன் உள்ளர்த்தம். ஆங்கில மொழிப் பிணைப்பால் நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமை கண்டோம். ஆனால், இன்று சிங்கள மொழி மூலம் ஒற்றுமை தேடுபவர்கள் எம்மை ஆட்கொண்டு ஆள வேண்டும் என்ற எண்ணத்திலேயே செயலாற்றுகின்றனர்" என்று கூறுவேன்.

இந் நாட்டில் எமது சிங்கள வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தால் அது ஒற்றுமையாகாது. அது சிறுபான்மையினரின் பயத்தின் அறிகுறி. "எமக்கு என்ன நடக்குமோ என்ற பீதியில் தான் நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம்" என்று கூறாமல் எம்மவர் "நாம் எல்லோரும் ஒரு நாட்டு மக்களே அதனால்த்தான் உங்களுக்கு நாம் வாக்களித்தோம்" என்று கூறத்தலைப்படுகின்றார்கள். அது தவறான வழிமுறை. தவறான கூற்று. அவ்வாறு சிந்தித்து நடந்து கொண்டால் எமது தனித்துவம் பறிபோய்விடும். எமது காணிகளும் வளங்களும் சூறையாடப்பட்டுவிடுவன. எமது தொழில்கள், கைத்தொழில்கள் போன்ற பலவற்றிலும் இருந்து எம்மைப் பெரும்பான்மையினர் வெளியேற்றிவிடுவார்கள். வெளிநாடுகளுக்கு செல்வதே எமக்கிருக்கும் ஒரே தேர்வாக வந்துவிடும். பலருக்கு இன்று வெளிநாடு செல்வதே ஒரேயொரு தேர்வாக படுகின்றது. படித்த பல் தொழில் விற்பன்னர்கள் கூட எம்மைவிட்டு வெளிநாடு போகவே விருப்பப்படுகின்றார்கள். எமது சனத்தொகை வெகுவாக குறைந்து வருகின்றது.

எங்களுடைய கட்சியின் இந்த தேசிய மகாநாட்டில் நாங்கள் யாவரும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் வாக்குகளை அளிப்போம் என்று உறுதி பூணுவோமாக - என்றார். (ஐ)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பை...

போராட்டங்களையும் அபிலாசை வெளிப்பாடுகளையும் சிங்கள தேசம் எப்போது புரிந்துகொள்ளத் தலைப்படுகிறதோ அப்போதுதான் அர்த்தம் மிகுந்த இலங்கையை கட்டியெழுப்ப முடியும். அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பையும் இனவாத நோக்கில் கட்டமைக்கப்பட்ட அதிகார பீடங்களின் செயல்முறைகளையும் நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதில் தெளிவுற்றுள்ள போதும், அடிப்படை விருப்புகளை கோருகின்ற எமது அரசியல் உரிமையின் மீது போர் தொடுக்கும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தை, "தமிழ்த் தேசியம்" என்னும் ஓர் குடையின் கீழ் நின்று கூட்டாக எதிர்க்கும் திராணியை உருவாக்குவதில் தான் ஈழத்தமிழினம் இன்று பெருந்தோல்வியை சந்தித்திருக்கிறது.

நம் எதிரிகள் ஒரு காலத்தில் நம் தலைவர்களை அழித்தார்கள். இன்று தலைவர்கள் உருவாவதற்கான சூழலை அழிக்கின்றார்கள். பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி ஒரு பொதுவான அரசியல் இயக்கத்துக்குள் நாம் நிலமும் புலமுமாக இணைய வேண்டும். இந்தப் புள்ளியில்தான் யதார்த்த புறநிலைகளைப் புரிந்தவர்களாக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஒரு கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்தும் அத்தகைய நேர்கோட்டில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களை பேணி ஒற்றுமைக்குள் வேற்றுமையும் வேற்றுமைக்குள் ஒற்றுமையும் காணுவது குறித்தும் - கூட்டமைப்பை மீள உருவாக்குவது குறித்தும் - அவ்வாறு மீளுருவாக்கம் பெறும் கூட்டமைப்பு என்பது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த மாநாட்டின் ஊடாக நான் அழைப்பு விடுக்கிறேன்.

கொள்கைரீதியாக ஒன்றுபட்டுச் செயல்படுகின்ற ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் அரவணைத்தவாறு புலம்பெயர் தேசக் கட்டமைப்புகளுடனும் இணைந்த வகையில் தமிழர்களின் தாகம் வெல்ல உழைப்பதே இங்குள்ள ஒவ்வொருவரினதும் முதன்மைக் கடமையாகும்.

எமது சிந்தனைகளை மீள் வடிவமைப்புக்கு கொண்டுவருவதன் மூலம் காலத்தின் வேகத்துடனும், பூகோள மாற்றங்களுடனும் எமது மக்களின் அபிலாசை தளங்களிலிருந்து தடம்புரளாது பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிமிக்க சூழலை எளிதாகக் கையாள்வதாயின், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும், புலத்திலிருந்தவாறு இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் உறவுகளும் ஒருங்கு சேர தம் அரசியற் பயணத்தை முன்கொண்டு செல்வதற்கான எதிர்கால வழி வரைபடம் ஒன்றையும் அதுசார் கொள்கை வகுப்புகளையும் உருவாக்க வேண்டும்.

அத்தகைய தளத்தில் நின்று எல்லாத் தரப்பினரையும் இணைத்துச் செயலாற்றுவதன் தேவையுணர்ந்த ஒருவனாக, அந்தத் தளத்தின் இணைப்புப் பாலமாக இருந்து என் எல்லா இயலுமைகளை கடந்தும் ஈழத்தமிழினத்தின் அரசியல் வேட்கையைச் சுமந்த பயணத்தின் பங்குதாரராக செயலாற்றுவதில் எனக்கிருக்கும் விருப்பையும் கடமையையும் நான் இவ்விடத்தில் வெளிப்படையாகவே பதிவுசெய்து செல்கிறேன் என்றார். (ஐ)

## அரச...

இதன்படி, அரச ஊழியர்களுக்கு அண்மையில் அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுடன் சேர்த்து 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அரசு ஊழியர்களின் சம்பளத்தை மறுஆய்வு செய்யவும், அடுத்த ஆண்டு முதல் சம்பளத்தை மாற்றியமைக்கவும் ஏற்கனவே குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதற்காக செலவிடப்படும் பணத்தை ஏதோ ஒரு வகையில் மக்களிடம் இருந்து வசூலிக்க வேண்டும். இல்லையேல், அடுத்த நான்கு மாதங்களுக்கு சிக்கல் ஏற்படும் என்று அந்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சொத்து...

சொத்து பொறுப்பு சட்டத்தின்படி, ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் சபாநாயகரிடம் சொத்துகள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

புதிய இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் ஆணைக்குழு சட்டத்தின்படி, சொத்து பிரகடனங்களை சமர்ப்பிக்கத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளையும் விதிப்பதற்கு அதிகாரம் உண்டு.

## 15 பேர்...

மருத்துவமனையில் உள்ள குறைபாடுகள் என மருத்துவர் இ. அர்ச்சுனா முன்வைத்தவை உட்பட 16 குற்றச்சாட்டுகளை எழுத்து மூலம் அமைச்சரிடம் வழங்கினர்.

இந்த 16 குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் விபரமாக கலந்துரையாடப்பட்டது. இவற்றில் உடனடியாக தீர்வு காணக்கூடியவற்றை உடன் தீர்க்குமாறு பணித்த அமைச்சர், ஜனாதிபதி, துறைசார் அமைச்சரான ரமேஷ் பத்திரணவுடன் பேசி ஏனைய பிரச்னைகளை உடன் தீர்த்துத் தருவதாக உறுதியளித்தார். (ஐ)

## 129 பில்லியன்...

காலப்பகுதியில் பிணைமுறிகள் மற்றும் பிணைமுறி உண்டியல்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மொத்த கடன் , 4852 பில்லியன் ரூபாவாக காணப்படுகின்ற நிலையில் அக்காலப் பகுதியில் 4981 பில்லியன் ரூபாய் கடன் மீள் செலுத்தப்பட்டுள்ளது.பெற்றுக்கொண்ட கடன்களின் பெறுமதியை காட்டிலும் 129 பில்லியன் ரூபா பொருளாதார முன்னேற்றத்தின் ஊடாக மீள் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கை வருகின்றனர் ஐ. எம். எவ். பிரதிநிதிகள்!

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்



கொழும்பு, ஜூலை 22

**சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

**அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

பொருளாதார முன்னேற்றம், அது தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகள் குறித்து கலந்துரையாடுவ தற்காகவே அவர்கள் இலங்கை வருகின்றனர். எதிர்வரும் தேர்தல் காலம் பொருளாதாரத்தின் வளர்ச் சிக்கு தடையின்றி கடந்து செல்லும் என எதிர்பார்க்கின்றோம்.

நாட்டின் பொருளாதார முன் னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நட வடிக்கைகள் குறித்து கலந்துரையா டவே பிரதிநிதிகள் குழு வருகை தருகின்றது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் தற்போதைய ஸ்திரத் தன்மை, பொருளாதார வளர்ச்சி 5.1 வீதமாக காணப்படுகின்றது.

இதனை ஆண்டு முழுவதும் பராம ரிக்க வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு.

இந்த வருடம், பொருளாதாரத் தில் 3 முதல் 3.5 வீதம் வரை வளர்ச்சி ஏற்படும். பொருளாதார வளர்ச் சிக்கு தேர்தல் காலம் தடை யாக இருக்காது என நம்புகிறோம். தடை கள் இல்லை என்றால் இந்த வருடம் 3.5 வீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவோம் - என்றார். (ஐ)

# ஐஸ் போதைப்பொருள் விற்றவருக்கு எய்ட்ஸ்!

கொழும்பு, ஜூலை 22

ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட 41 வயது நபருக்கு எச். ஐ. வி. தொற்று இருப்பதை சுகாதா ரத் துறையினர் நடத்திய விசாரணையில் தெரியவந்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலையில் கைது செய்யப்பட்ட இவர் கண்டியை சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாவனைக்கு பழக்கப்பட்ட வர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# அதிகாரம், பதவி காலத்தை குறைக்கவே 19 உருவானது!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஜூலை 22

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் எல்லையற்ற அதிகாரத்தை குறைத்து ஜனாதிபதி பதவிக் காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாகக் குறைப்பதே 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் நோக்கம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை கூறியுள்ளார். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன் றத்தின் அதிகூடிய பதவிக் காலத்தை 5 வருடங்களாகக் குறைக்காமல் விட்டமைக்கு ஜயம்பதி விக்ரமரத்னவின் அனுபவக் குறைவால் ஏற்பட்ட தவறே காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை ஜயம்பதி விக்கிரம ரத்ன மறுத்திருந்தார்.

இந்த நிலையில், பொலநறுவையில் நேற்று நடந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண் டவாறு தெரிவித்தார். (ஐ)

# ஆனைக்கோட்டை அகழ்வாய்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது!

## பேராசிரியர் புஷ்பரட்ணம்



யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆனைக்கோட்டையில் கடந்த ஒரு மாத காலமாக நடந்த அகழ்வு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளன - என்று யாழ்ப் பாண மரபுரிமை மையத்தின் தலை வர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதி பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணை யில் ஆனைக்கோட்டையில் மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ் வாய்வின் நிறைவு விழாவும் சான்றி தழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் கலாசார மத் திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக முன்னெ டுக்கப்பட்டு வந்த அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த அகழ்வின் போது கண்டெடுக்கப் பட்டவற்றை ஆய்வு செய்யும் நடை முறைகளை இனித்தான் முன்னெ டுக்க வேண்டும். எம்மால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தொல்லியல் பொருட்களை யாழ். பல்கலையில் காட்சிப்படுத்த அனுமதி வழங் கப்பட்டுள்ளது. அதனால், அவற்றை விரைவில் பல்கலைக் கழகத்தில் காட்சிப்படுத்தும் ஏற்பாடுகளை செய்யவுள்ளோம்.

ஆனைக்கோட்டையில் 1980 ஆம் ஆண்டிலேயே ஆய்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த ஆய்வு பணிகளின்போது, யாழ்ப் பாணத்தில் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இருவரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக் கப்பட்டன. அத்துடன், நிவேதிய பொருட்களையும், முத்திரை மோதி ரங்களும் மீட்கப்பட்டன. அவை சிந்துவெளி காலத்துக்கு உரியவை. இவற்றில் பிராமி எழுத்துகளும் காணப்பட்டன. அதில் இன குழு மம் ஒன்றின் தலைவனின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த தொல்லியல் பொருட்களை 1998 ஆம் ஆண்டு இழந்துள்ளோம்.

இந்த நிலையிலேயே மீண்டும் கடந்த ஜூன் முதல் ஆய்வு ஆரம்ப மானது. 1980களில் நவீன தொழில் நுட்பங்கள் இருக்கவில்லை. ஆனால், தற்போது நவீன தொழில்நுட்பங் கள் இன்றி மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுகள், விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்த முடியாது.

அதனால் இலங்கையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்க ளின் உதவியுடன், மிகப் பிரமண்ட மாக ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக அகழ் வாய்வுகளை மேற்கொண்டோம். எமது ஆய்வு நடவடிக்கையில் கற் காலத்துக்கு முற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவம் வாய்ந் தவர்கள், என்புகளை ஆய்வு செய்து காலத்தை கண்டறிய கூடிய வர்கள் என பலதரப்பட்டவர்களை ஒன்றிணைத்து ஆய்வை முன்னெ டுத்தோம் - என்றார். (ஐ)

# வவுனியாவில் 'யுக்திய' 19 சந்தேகநபர்கள் கைது!

வவுனியா, ஜூலை 22

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட விசேட யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கையில் 19 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய வவுனியாவில் நேற்று விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில், 106 பொலிஸார் ஈடுபட்டனர். இவர்களுக்கு உதவியாக 21 படையினர், 4 விசேட அதிரடிப் படையினரும் பங்கேற் றிருந்தனர்.

இதன்போது, வவுனியா தேக்கவத்தை பகுதியை சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவர் 2005 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப் பட்டார். அத்துடன், அதே பகுதியை சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவர் 3580 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

மகாறம்பைக் குளத்தில் கஞ்சா கலந்தா மாவாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தவிர, திறந்த பிடியாணை பிறப்பிக்கப் பட்ட 5 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவ ரும் கைது செய்யப்பட்டனர். ஆள் அடையாள ஆவ ணங்கள் உடைமையில் வைத்திருக்காத 4 பெண்கள், 4 ஆண்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# த. தே. ம. முன்னணி எம்.பிக்களுக்கு அபிவிருத்தி நிதியாக 6 கோடி ரூபாய்

## சுமந்திரன் எம். பிக்கும் ரூ. 4 கோடி

கொழும்பு, ஜூலை 22

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர்க ளான செல்வராஜா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு விசேட அபிவிருத்தி நிதியாக 6 கோடி ரூபாய் விசேட அபிவிருத்தி நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, சுமந்திரன் எம். பிக்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு தமிழ் பாரா ளுமன்ற உறுப்பினர்களை தன் வசம் வைத்துக்கொள்ளும் நோக்கில் அபிவிருத்தி நிதி ஒதுக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம். பிக்களுக்கும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

முன்னர், யாழ். மாவட்ட எம். பிக்களான த. சித்தார்த்தன், சி. சிறீ தரன், வன்னி மாவட்ட எம். பியான செல்வம் அடைக்கலநாதன் ஆகி யோருக்கு இவ்வாறு அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், கஜேந்திரன் எம். பி. ஜனாதிபதியின் விசேட அபிவிருத்தி நிதி தங்களுக்கும் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தார். இதன் அடிப்படை யில், கஜேந்திரகுமார் எம். பிக்கு 4.6 கோடி ரூபாயும் கஜேந்திரன் எம். பிக்கு 2 கோடி ரூபாயும் அபவிருத்தி நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளதாக யாழ். மாவட்ட செயலகத் துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்த்து பாராளு மன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரனுக்கு 4 கோடி ரூபாய் அபி விருத்தி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.